17.03.2026

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 181/2025</u>

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவதாஸ் | | |
| த/பெ | சூசைமணி | | |
| கிராமம் | ஊரல் கரைமேடு, விழுப்புரம் | தொழில் | வாடகை கார் ஓட்டுனர் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 64 /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 17.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வாடகை கார் ஓட்டுனராக தொழில் செய்து வருகிறேன். புனல் சூர்யா என்பவர் என் உறவுக்காரர் ஆவார். தம்பி மகன் முறை ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் என் பணி சம்பந்தமாக வெளியூருக்கு கார் ஓட்டி சென்று விட்டேன். என் மனைவி வீட்டில் யாரோ வந்து இருட்டில் மிரட்டி விட்டு சென்றதாக தகவல் சொன்னார்கள். இது சம்பந்தமாக நான் வந்து என் மனைவியிடம் விசாரித்துவிட்டு, விழுப்புரம் நகர காவல் நிலையத்தில் சென்று, இது குறித்த விவரங்களை சொன்னேன். என்னிடம் எழுதாத ஒரு வெள்ளை தாளில் கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

வேறு ஒன்றும் அங்கு நடைபெறவில்லை. எங்களுக்கும், எங்கள் குடும்பத்திற்கும், வேறு யாருக்கும் முன் விரோதம் இல்லை.

<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

என் தம்பி மகன் முறை கொண்ட புனல் சூர்யா என்பவர் அவர் மீது சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு கஞ்சா வழக்கை போலீசார் போட்டார்கள் என்றும், அதை பயன்படுத்தி கோயிலூரை சேர்ந்த செல்வராஜ் மகன் சூர்யா என்பவர் அவர் பெயரை பயன்படுத்தி அதே வியாபாரம் செய்து வந்தார் என்றும், அதனால் இருவருக்கும் இடையில் முன்விரோதம் இருந்தது என்றும், கடந்த 22/06/2023 ம் தேதி அதிகாலை சுமார் 3.00 மணியளவில் நாங்கள் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது, சத்தம் கேட்டு வெளியில் வந்தோம் என்றும், அப்போது 4 மோட்டார் சைக்கிளில் கோலியனூரை சேர்ந்த கோகுலகிருஷ்ணன் த/பெ.துரைராஜ், சூர்யா த/பெ.செல்வராஜ், பனங்குப்பத்தை சேர்ந்த தமிழ்செல்வன் த/பெ.செல்வம், மாதேஸ்வரன் த/பெ.கனகராஜ், கோலியனூரை சேர்ந்த திலகர் த/பெ.சக்திவேல், கௌதம் த/பெ.சங்கர் பாண்டி, பானம்பட்டை சேர்ந்த அரவிந்த் த/பெ.பழனி, ராகம் பேட்டையை சேர்ந்த தமிழ்ச்செல்வன் த/பெ.கணபதி, ஆகியோர்கள் வந்து என்னை பார்த்து டேய் தேவிடியா பையா, எங்கடா உங்க அண்ணன் பையன் புனல் சூர்யா என்று கேட்டு புனல் சூர்யாவை போட்டு தள்ளி விடுவோம் என்றும், அவனை வர சொல்லுங்கடா பார்ப்போம் என்றும், கோகுல கிருஷ்ணன் கத்தியை காட்டி அவனுக்கு போன் போடுடா என்று சொன்னார் என்றும், மற்ற 7 பேரும் சேர்ந்து இந்த தேவடியா பையனை புதைத்தால் அவன் வருவான் என்று சொல்லி, நெட்டித்தள்ளி காலால் எட்டி உதைத்தார் என்றும், கையால் என் கழுத்து, கால், முதுகு ஆகியவற்றில் சராமரியாக குத்தினார் என்றும், வலி தாங்க முடியவில்லை என்று நான் சொன்னேன் என்றும், சூர்யாவிற்கு நான் போன் செய்தேன் என்றும், அந்த போன் நாட் ரீச்சபிள் என்று வந்தது என்றும், இவனை இப்படியே விட்டால் சரி வராது என்று சொல்லி கோகுலகிருஷ்ணன் தனது கையில் வைத்திருந்த கத்தியால் இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி தன் கழுத்தை நோக்கி வீசினார் என்றும், நான் சுதாரித்து நகர்ந்ததால் அது என் மீது படவில்லை என்றும், இந்த சத்தம் கேட்டு என் அண்ணன் ராமன், ஊரல்

கரை மேட்டை சேர்ந்த பச்சையப்பன், மற்றும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள் என்றும், அவர்கள் வருவதைப் பார்த்து அனைவரும் அங்கிருந்து சென்று விட்டார்கள் என்றும், இது சம்பந்தமாக சூர்யா தன்னிடம் இதை பெரிது படுத்த வேண்டாம் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார் என்றும், அதனால் நான் அமைதியாக இருந்து விட்டேன் என்றும், பிறகு மேற்படி நபர்கள் அடிக்கடி என் வீட்டு பக்கம் வந்து சென்றதால் என் உயிருக்கும், புனல் சூர்யாவின் உயிருக்கும், ஆபத்து ஏற்படும் சூழ்நிலை இருந்ததால் இதுகுறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துக் கொண்டேன் என்றும், இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக புகார் ஒன்றை கொடுத்துக் கொண்டேன் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

<u>**இல்லை.**</u>